# கேணிவனம்

<u>**பாகம் - 01**</u>

முன்னாள் இரவு சென்ட்ரலில் இருந்து கிளம்பிய அந்த மும்பை மெயில், மேற்கு கர்நாடகாவின் அடர்ந்த காட்டுப்பகுதிகளில் பயணித்துக் கொண்டிருந்தது. மணி முற்பகல் 11 என்றால் யாரும் நம்பமாட்டார்கள். அவ்வளவு மேகமூட்டத்துடன் அந்தக் காடு மாலைவேளை போல் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

இரயில் தண்டவாளம் என்ற பெயரில் சீராக அமைந்திருக்கும் அந்த இரண்டு இரும்பு கோடுகளை இரசித்தபடி தனது ஜன்னலோர இருக்கையில் குணா அமர்ந்திருந்தான். அப்பர் பர்த்தில் 11 மணிவரை தூங்கியும்கூட அவன் மட்டுமல்ல, அந்த கம்பார்ட்மெண்டில் அனைவரும் அப்படித்தான் தெரிந்தார்கள். தனக்கு எதிர்சீட்டில் ஜன்னலோரம் அமர்ந்து ஒருவன் சுவாரஸ்யமாக புத்தகம் படித்துக் கொண்டிருந்தான். குணா மெல்ல குனிந்து அந்த பத்தகத்தின் பெயரைப் படித்தான். 'UNEXPLAINED' என்றிருந்தது. குணா இப்படி பார்ப்பது பிடிக்காமல், அந்த புத்தகம் படித்தவன் குணாவைப் பார்த்து முறைத்தான்.

'ஹாய்... சாரி... என்ன புக்-னு பார்த்தேன்...' என்று குணா அசடுவழிந்தான். அவன் மெல்லிய சிரிப்பை பதிலாக அளித்தான். மீண்டும் அவன் கவனம் புத்தகத்தில் புதைய இப்போது டிரெய்ன் கொஞ்சம் கொஞ்சமாக வேகத்தை குறைத்துக் கொண்டு நின்றது.

வேகம் குறைந்ததும், கம்பார்ட்மெண்டில் வீசிய காற்றுப்போக்கு மாறவே, கவனம் கலைந்தவனாய், அந்த புத்தகம் படித்துக்கொண்டிருந்தவன் புத்தகத்தை மூடிவைத்துவிட்டு ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான்.

நின்ற இடம் ஸ்டேஷன் இல்லை, இருபக்கமும் அதே அடர்ந்த காடு.

5 நிமிடத்திற்கு மேல் இரயில் நகரவேயில்லை.....

கம்பார்ட்மெண்ட் உள்ளிருந்த மக்கள் முணுமுணுத்துக் கொண்டிருக்க, சில தைரியர்கள் இரயிலுக்கு கீழே இறங்கியும் பேசிக்கொண்டும் நின்றனர். குணாவும் ஜன்னல் வழியே வெளியே பார்த்தான். சில ஆண்கள் திரும்பி நின்று